# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 42வது கூட்டறிக்கை
# 2021.08.10

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 42வது அமர்வு 2021.08.10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 42வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இந்த சபைக்கு சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த அமர்வு சட்டபூர்வமாக நடந்திருக்க முடியாது. MOH இன் அறிவித்தலின் படி குளிரூட்டப்பட்ட அடக்கமான இடத்தில் நாம் கூடுவது பொருத்தம் இல்லை. மிகவும் சுருக்கமாக அத்தியவசிய விடயங்களை மட்டும் பேசிவிட்டு முடித்தால் நல்லது. இன்றய Delta Variant பயங்கரமாக பரவி வருகின்றது. அதன் தாக்கம் நமக்கு விளங்காவிட்டாலும் மேல் மாகாணத்தில் பெரியளவில் அந்த தாக்கம் ஏற்பட்டுள்ளதாக எனது நண்பர்கள் கூட கூறியிருக்கின்றார்கள். அதனால் நாம் இந்த கூட்டத்தை எவ்வளவு சுருக்கமாக முடிக்க முடியுமோ அவ்வளவு சுருக்கமாக முடிப்பதற்கு உங்களின் ஒத்துழைப்பை நாடியவனாக,

கொவிட் இன் தாக்கத்தினால் சபையின் வருமானத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி நான் உங்களுக்கு தொடர்ந்து கூறி வந்திருக்கின்றேன். அப்படி இருந்தும் நாம் அடிப்படை சேவைகளில் குறை இல்லாதவாறு நடாத்தி வந்திருக்கின்றோம். இவ்வருடத்திற்கு எஞ்சி இருக்கும் 05 மாதங்களின் செலவீனங்களும், அடுத்த வருடத்திற்கு முதல் 03 மாத செலவீனங்களுக்கும் கொடுக்க வேண்டிய அளவில் உண்மையாக நிதி முகாமைத்துவம் இருக்க வேண்டும். அப்படியானால்தான் நாம் இல்லாவிட்டாலும் அந்த நிர்வாகத்தை செய்பவர்கள் அல்லது அமையும் புது சபைக்கு ஏதாவது செய்யக்கூடியதாக இருக்கும். ஆனால் இன்றய நிதி நிலை நாம் அரசாங்கத்திடம் நமது நிரந்தரமற்ற ஊழியர்களின் சம்பள மீளாய்வு செய்வதற்கு நாம் வேண்டுகோள் விடுத்திருந்தாலும், அரசாங்கம் சபைகளுக்கு மாதாந்த செலவீனங்கள் எதுவும் கொடுப்பதாக அறிகுறிகள் இல்லை. அப்படியான ஒரு கட்டத்தில் நமது செலவீனங்களை குறைப்பதை தவிர நமக்கு மாற்றுவழி இல்லை.

செலவீனங்களை குறைப்பது என்று கூறும் போது நாம் பல கோணங்களில் பார்க்க வேண்டியதாக இருக்கும். இலேசாக செய்வது என்றால் நிரந்தரமற்ற ஊழியர்களின் வேதனத்தை குறைப்பது அல்லது ஆளணியை குறைப்பது. ஆனால் அதை செய்யும் போது அதனால் பாதிக்கப்படுகின்ற குடும்பங்களையும் நாம் உள்வாங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏறத்தாள 91 நிரந்தரமற்ற ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் 06 வருடங்கள் பூர்த்தி செய்தவர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்கு சம்பளம் 25, 26 நாள் முழுமையாக வழங்கப்படுகின்றது. கொவிட் 19 இனால் Lock Down இல் இருந்தவர்களுக்கு கூட சம்பளம் உங்களின் அனுமதியோடு வழங்கி இருந்தோம். ஆனால் எதிர்காலங்களில் அதை குறைக்க வேண்டிய தேவை ஏற்படலாம். ஆகக் கூடியது ஒரு ஊழியருக்கு 20 அல்லது 21 நாள் வரக்கூடியதாக நாம் முகாமைத்துவம் செய்ய வேண்டிய தேவை ஏற்படலாம். நான் இயலுமான அளவு அதை தவிர்த்து அவர்களுக்கு வேலை இருந்தால் வேதனம் வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சி எடுப்போம். ஆனால் தவிர்க்க முடியாத கட்டத்தில் அப்படியான ஒரு நிலமை ஏற்படலாம்.

இந்த வருடத்திற்குரிய நமது நிரந்தர அல்லது ஏலத்தில் விட்டு வரும் வருமானம் கடை வாடகை, இறைச்சிக் கடை வாடகை, Open Market Tender இவை நமக்கு மொத்தமாக இறுதி 06 மாதத்திற்குரிய பணம். இந்த மாதத்துடன் மாற்றுப்பட்டதனால்தான் நாம் ஓரளவுக்கு இயங்கக் கூடிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் அதிலும் 02 மாதம் மூடப்பட்டு இருந்ததனால் அவர்களுக்கு கழிவு வழங்க வேண்டிய தேவை வரும். அது கிட்டத்தட்ட 4.7 மில்லியன். மற்ற சபைகளை விட நாம் வங்கியிடமோ வேறு எங்குமோ கடன் எடுத்து சபை நடாத்த வேண்டிய நிலையில் இல்லை. இறைவனின் உதவியோடு உங்களின் ஒத்துழைப்போடு இன்ஷா அல்லாஹ் இந்த வருடத்தை நாம் கொண்டு செல்லலாம். இதற்கு உங்களது ஒத்துழைப்பு தேவை. அதிகாரிகள் மூலமாக இதை கட்டுப்படுத்துவது எனது பொறுப்பு. ஆனால் நீங்களும் இதை முழுமையாக உள்வாங்காவிட்டால் என்னோடு மனவருத்தப்படும் நிலை வரும். ஆனால் நான் உங்களிடம் எதையும் ஒழித்து மறைத்ததில்லை. எல்லாம் வெளிப்படையாக நடக்கின்ற விடயங்கள். அதனால் நமக்கு இருக்கும் எஞ்சிய காலம் சட்ட ரீதியாக ஜனவரி மாதத்திற்கு முதல் இந்த சபை முடிவடையலாம். அப்படி

நமது காலம் முடியும் போது எல்லா விதத்திலும் இந்த சபையை ஒழுங்காக நடாத்தியவர்களாக செல்வதுதான் நமக்கு மரியாதை. எனக்கு தெரியும் சென்ற சபை முடிவடையும் போது நான் மேடைகளில் விமர்சிக்கப்பட்டவன். பணத்தை வைத்துவிட்டு சென்றுவிட்டார் யாரோ செலவளிக்கப்போகின்றார் என்று, ஆனால் அந்த முகாமைத்துவத்தினால்தான் இன்றும் நாம் பிரச்சினை இல்லாமல் நடந்து வருகின்றோம். இதில் வேறு தெளிவுகள் தேவையானால் நான் தருவதற்கு தயார்.

அரசாங்கம் பெரியளவில் அடுத்த வருட அபிவிருத்திக்காக அவர்கள் Proposals கேட்டிருந்தார்கள். எம்மால் LAPDP இல் உள்ள முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஏறத்தாள 220 மில்லியனிற்குரிய வேலைத்திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றது. அது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது தெரியாது. ஆனால் LAPDP காலத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கு அப்பால் விசேடமான திட்டங்கள் ஏதாவது உங்களிடம் இருக்குமானால் அதை எழுத்து மூலம் சமர்ப்பிப்பதனால் நாம் அதை உள்வாங்கலாம். அதே நேரம் ஏறத்தாள 03 வருடங்களாக I Road Project உண்மையாக என்னைப் பொருத்தமட்டில் ஒரு அவமானம். எனது வீட்டிற்கு வருகின்ற 02 பாதைகளும் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. ஆனால் நான் அதற்கு பொறுப்பான Engineer உவைஸ் அவர்களிடம் பேசும் போது கொந்தராத்துக்காரர்களிடத்தில் பாரிய பிரச்சினை இருப்பதாகவும் அறிவித்தார். ஆனால் இந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாததனால் நமக்கு பெரிய ஒரு இழுக்கு. நாம் ஒன்றும் செய்யவில்லை என்று, இது கசப்பான உண்மை. இந்த சபை அமர்வின் பின் நான் உத்தியோகபூர்வமாக மீண்டும் பாதைகளில் உங்கள் எல்லோரிடமும் கலந்தாலோசித்து ஒவ்வொரு பாதையின் இன்றய நிலையை விபரித்து ஒரு கடிதம் அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளேன். மழை ஆரம்பித்தால் ஒரு வேலையும் செய்ய இயலாது.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 02வது நீர்க்கட்டணம் கொவிட் காலங்களில் மூடப்பட்டிருந்த நிலைகளில் நீர்கட்டணம் அதிகரித்து இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சுட்டிக்காட்டியதற்கு நன்றி. சிறுவர் பூங்காக்கள் இயங்காவிட்டாலும், தோட்டங்கள் இருக்குமானால் நீர்ப்பாவனை இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறுவர் பூங்காக்கள், நூலகங்கள், விளையாட்டுக் கட்டிடத்தொகுதி எல்லாவற்றுக்கும் நீர்கட்டணம் அதிகரித்திருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Swimming Pool என்ன நிலையில் இருந்தாலும் நீர் குறைய குறைய நிரப்பப்பட வேண்டும். அதுதான் பாரிய ஒரு செலவு. ஒவ்வொரு மாதமும் பார்த்தீர்களானால் வெயில் காலங்களில் செலவு கூடும். மழை காலங்களில் செலவு குறையும். சில நேரம் இது 02 மாதத்திற்குரிய கட்டணமாகவும் இருக்கலாம். அதன் விபரத்தை நான் பார்க்கின்றேன். இது ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு Form இருக்கின்றது. சென்ற மாதத்தை விட கூடி இருந்தால் ஏன் கூட என்று காரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை செயலாளர் சிபார்சு செய்த பின்புதான் நான் ஒப்பம் இடுவது. நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளதால் நான் மீண்டும் பார்க்கின்றேன்.

**தீர்மானம் - 04/42/01**
சென்ற மாதம் 2021.07.01 தொடக்கம் 2021.07.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

05 வருடங்களுக்கு மேற்பட்ட Financial Record இனை தவிர ஏனைய Records எல்லாம் அழிக்கலாம். ஆனால் இதில் மிகவும் கவனமாக செயற்படுத்த வேண்டும். சில நேரங்களில் பிணக்குகள் இருக்கின்ற Records அழிக்கப்பட்டால் அது ஒரு பிரச்சினை. அதனால் இந்த செயற்பாட்டை நடாத்துவதற்கு 03 கௌரவ உறுப்பினர்கள் ஒரு குழுவில் உள்வாங்கப்பட வேண்டும். நீங்களும் பார்த்து சரி என்று கணிக்கப்பட்டால்தான் அது என்னைப் பொருத்தவரைக்கும் நியாயமாக இருக்கும். கௌரவ உப தவிசாளர் தலைமையில் அதை செய்யலாமா?

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஆவணங்கள் என்கின்ற விடயத்தில் 05 வருடத்திற்கு முற்பட்டதை அழிக்கத் தொடங்குகின்றோம். ஆனால் நாங்கள் தான் இந்த ஊருக்கே கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கின்றோம். அப்படி கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குகின்ற நாம் நமது சபை பணத்தில் ஒரு கட்டடத்தை கட்டி யாரோ இன்றைக்கு வாடகை எடுக்கின்றார்கள். ரூபா 30,000 வாடகை எடுத்தாலும் 02 தொழிலாளிக்கு சம்பளம் கொடுக்கலாம். அதன் ஆவணங்கள் எங்கே?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இப்படியானவைகள் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகின்றேன். அந்த ஆவணங்கள் இருக்கின்றது. ஆவணங்கள் பிரச்சினை இல்லை. அது நடைமுறையில் தான் பிழைத்தது. ஆனால் அந்த செயற்பாட்டை செய்கின்ற நேரம் பிரதேச சபைக்கு 50 வீதத்திற்கு மேற்பட்ட சொத்துக்கள் அரச சொத்துக்களாகவே இன்னும் இனங்காணப்பட்டிருக்கின்றது. இன்னும் மாற்றம் செய்யவில்லை. நடைமுறையில் இருக்கின்ற தாமதத்தினால் சபைக்கு சரியான முறையில் அது கையளிக்கப்படாமல் இருக்கும் போது பிரதேச செயலகத்தின் அனுமதி இல்லாமல் சபையும் தனியே எதுவும் செய்ய இயலாது. State Land என்று சொன்னால் நாம் பராமரித்து இருந்தாலும் அதில் ஏதாவது செய்வது என்றால் சொந்தக்காரர் அரசு. அரசு என்றால் பிரதேச செயலாளர். அவரின் அனுமதியோடு செய்திருந்தால் பிரச்சினை இல்லை. இதில் நடந்த பிரச்சினை கட்டடம் கட்டப்படும் போது எந்த நடவடிக்கையிலும் பிரதேச செயலகம் உள்வாங்கப்படவில்லை.

அரச காணியில் ஒருவர் அத்துமீறி குடியிருந்தால் அந்தப் பிரச்சினையை பிரதேச செயலகம் பார்க்க வேண்டுமே தவிர பிரதேச சபை தலையிட இயலாது. பிரதேச சபை அதன் அதிகாரத்தை மீறி அந்த கட்டடம் கட்டப்பட்டது என்றுதான் இன்றைக்கு Court இல் இருக்கின்ற பிரச்சினை. பொது மைதானத்தை நாம் என்ன சொல்வோம் அது பிரதேச சபைக்குரியது. பிரதேச சபை பராமரிக்கின்றோம். ஆனால் இன்றைக்கும் அந்த மைதானம் பிரதேச சபையில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை. பிரதேச செயலக Record இல் பார்த்தீர்களானால் State Land என்றுதான் இருக்கின்றது. State Land இல் நாம் ஏதாவது செய்வது என்றால் அதற்காகத்தான் பிரதேச செயலாளரை எல்லாவற்றுக்கும் உள்வாங்குவது. நாம் பராமரிக்கின்றோம் ஆனால் உரித்து நமது இல்லை. அதனால் தான் ஆவணங்களை அழிக்கும் போது சரியான முறையில் செய்ய வேண்டும். Building Approval எல்லாம் அழிக்க இயலாது. நமக்கு தேவையில்லாத Leave Application போன்றவைகள் எல்லாம் அழிக்கப்படலாம். அதற்காகத்தான் 03 கௌரவ உறுப்பினர்கள் உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து செய்வது நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த விடயங்களை 02 சபை காலத்திற்குள் நன்றாக அறிந்தவர் நீங்கள். தற்போது இருக்கின்ற பிரதேச செயலாளர் எமது செயற்பாடுகளுக்கு நூற்றுக்கு நூறு வீதம் உதவியாக இருக்கின்ற ஒருவர். இந்த காலகட்டத்தில் இதை வைத்துதான் சொல்கின்றேன் நமது

Ground உம் அதற்கு பக்கத்தில் உள்ள நிலம் இவைகளை ஒரு தேவைக்காக கேட்க வேண்டும். அடுத்தது நான் சொன்ன 06 ஏக்கர். இவை எல்லாம் வாய்மொழி ஒப்புதல் மூலம் நான் கேட்கின்ற நேரம் சொன்னார். பிழையாக கட்டப்பட்டு இருந்தால் அந்த காசு சபைக்குரிய காசு அந்தக் காசு நமக்கு வர வேண்டும். பிழையான வேலையை ஒருவர் செய்தால் தொடர்ந்து அந்த பிழையை அனுமதித்தால் அது அவருக்கு சரி மாதிரி இருக்கும். நாம் நமக்கு தேவை என்று பல முறை எத்தனையோ அமைச்சருக்கு கடிதம் கொடுத்திருக்கின்றோம்.

மஹல்லா மஹல்லா மையவாடி வண்ட் பாதை தொடர்பில் நீர்ப்பாசன திணைக்களம் எம்மிடம் பராமரிக்க தராமல் இன்றைக்கு சட்டரீதியற்ற முறையில் சிலர் மதிலை கட்டி Gate வைத்து இருக்கின்றது. இதனால் நான் மரண வீடு என்றும் பார்க்காமல் தவிசாளரிடம் உண்மையை சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்திற்கு அவராகவே தள்ளிவிட்டார். நாம் 09 பேர் இருக்கும் போதுதான் அவ்வாறு நடந்தது. அதே போல் இன்னொரு சபை வந்து ஒத்துழைப்பு வழங்குமா என்பது யோசிக்க வேண்டிய விடயம். பலமான எதிரிகள், கருத்து முரண்பாடுகள், எதிர்த்து வாக்களித்தாலும் எதிரி என்கின்ற முறையில் எல்லாருக்கும் ஒத்துழைப்பு, வயது, அனுபவத்தின் கீழ் இந்த ஆதரவை மானசீகமான முறையில் எல்லாரும் வழங்கி இருக்கின்றார்கள். இருக்கின்ற காலத்திலாவது நாங்கள் இந்த விடயத்தை பார்த்து முடிக்க வேண்டும். நாம் இந்த ஊருக்கு இவ்வளவு காலம் இருந்ததற்கு பதில் சொல்ல வேண்டும். அந்த கடப்பாடு நமது தலையில் இருக்கின்றது. எரிக்க வேண்டும் என்றும் சொல்லும் போது என்னைப் பொருத்தமட்டில் அதற்கு ஒரு இடத்தை அமைத்து வைத்தால் சிறப்பாக இருக்கும் என நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஆவணங்கள், சொத்துக்கள் விடயத்தில் நான் மிகவும் கவனமாக இருப்பவன். பின்னடைவுக்கு காரணம் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவின் சரியான ஒத்துழைப்பு இல்லாதபடியினால். District Surveyor Department இற்கு சென்று ஒவ்வொன்றுக்கும் 20,000.00 ரூபா, 30,000.00 ரூபா செலவளிக்க வேண்டும். Surveyor Plan இற்கு நாம் பணம் செலுத்துவது என்றால் இது எங்களுக்காக இனங்காணப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலம் என்பது உறுதிப்படுத்தப்படும். அதை செய்து வருகின்றோம். நீங்கள் கூறுவது போல் நிச்சயமாக நமக்கு பாரிய பொறுப்பு ஒன்று இருக்கின்றது. நீங்கள் ஒன்று விளங்க வேண்டும் நான் மட்டும் செய்ய இயலாது. நான் பல தடவை கூறியிருக்கின்றேன். கௌரவ உறுப்பினர்களை நான் அழைத்து சொல்ல வேண்டும் என்ற அளவுக்கு இருந்தால் அது நடக்காது. கௌரவ உறுப்பினர்கள் நான் பாரம் எடுத்து நான் செய்கின்றேன் என்றால் என்னுடைய நூறு வீத ஒத்துழைப்பு இருக்கின்றது. இதுவரைக்கும் நான் எந்த திட்டத்தை கொண்டுவந்தாலும் அதற்கு தடையாக இருந்ததில்லை. அதற்கு சான்றிதழ்கள் இருக்கின்றது. ஆனால் சட்டத்தை மீறாமல் அதற்குள் என்ன செய்யலாமோ அதை செய்வதற்கு நான் தயார். இதில் யார் யார் முன்னுக்கு வருகின்றீர்கள். கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர் சஹீல், கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் சேர்ந்து செயற்படுத்தினால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**தீர்மானம் - 04/42/02**

எமது சபையில் பதிவு அறையில் உள்ள 05 வருடங்களுக்கு மேற்பட்ட தேவையற்ற ஆவணங்கள், விண்ணப்பப்படிவங்கள் போன்றவற்றை அழிப்பதற்கான பிரேரணை. கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர்களான ஏ.சீ.எம்.சஹீல், என்.கோவிந்தசாமி, எம்.எஸ்.சரீபா என்பவர்கள் செயலாளருடன் சேர்ந்து செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

### தீர்மானம் - 04/42/03

LL – 6939 இலக்க டம்ரக் இயந்திரத்திற்கு கிளச் பகுதி திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் இடையூறு செய்வது என்றால் மன்னிக்கவும். நீங்கள் இந்த சபையில் குழுக்கள் சேர்ந்து வேலை செய்யுங்கள் என்று கட்டளை இடுகின்றீர்கள். ஆனால் நீங்கள் கட்டளையிட்டு செல்வது மட்டும்தான். அந்த குழுக்கள் சேர்ந்து வேலைகள் செய்கின்றதா என்று சந்தேகம் தான். உதாரணமாக நீங்கள் கட்டளை இட்டதுதான் என்னை கொள்வனவு செய்வதற்கான குழுவில் நியமித்தீர்கள். இற்றைவரைக்கும் இந்த சபையில் 04 மாதங்கள் கடந்துவிட்டது அது சம்மந்தமாக எதுவித அழைப்பும் எனக்கு வந்ததும் இல்லை. அது சம்மந்தமாக எனக்கு எதுவுமே தெரியாது. ஆகவே தவிசாளரும் செயலாளரும் சேர்ந்தே இந்த வேலைகளை செய்யலாம் என்று நினைக்கின்றேன். இந்த சபையில் இருப்பவர்களை அழைக்கத் தேவையில்லை. மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்னும் சொல்வதற்கு இருக்கின்றது கௌரவ தவிசாளர் அவர்களே.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியான ஒரு குறைபாடு இருந்திருக்குமானால் நான் அதற்கு மனவருத்தப்படுகின்றேன். ஆனால் குழுக்களுக்கு உங்களை சிபார்சு செய்யும் போது அது நடக்காவிட்டால் என் கவனத்திற்கு உடனடியாக கொண்டு வந்திருந்தால் அது நிவர்த்தி செய்யப்பட்டிருக்கும். நான் செயலாளரின் கீழ் இயங்கும் ஊழியர்களின் எழுத்துமூலப் படிதான் நான் இயங்குகின்றேன். உங்களை நியமித்து எங்களிடம் கேட்கவில்லை என்பதை முதலாவது மாதத்திலே கூறியிருந்தால் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கலாம். அதை குறைபாடாக வைத்து 04 மாதங்களுக்கு பின்னர் அழைக்கவில்லை என்றால் 04 மாதத்திற்கு பின்னர் பேசுவதில் என்னைப் பொருத்தமட்டில் பிரயோசனம் இல்லை.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் ஒரு தடவை உங்களிடம் வந்து கேட்ட போது என்னிடம் கூறினீர்கள் செயலாளரிடம் அல்லது நௌசாட் அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களிடம் கேளுங்கள் என்று, நான் சென்று கேட்டேன் அதற்கு அவர் எனக்கு தெரியா Medam இனிமேல் அப்படி வந்தால் உங்களை அழைத்துக் கொள்வேன் என்றார். LGA அவர்களிடமும் இது விளக்கமாக கதைத்திருக்கின்றேன். ஆனால் இற்றைவரைக்கும் அது சம்மந்தமாக எதுவும் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்குரிய நடவடிக்கையை நான் எடுக்கின்றேன். அடுத்ததாக கௌரவ உறுப்பினர்கள் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்திற்கான முன்மொழிவுகளை நாம் தயாரித்து கொடுத்துவிட்டு செல்ல வேண்டும். ஆனால் வருமானத்தினை எப்படி காட்டுவது என்பதுதான் பாரிய சவால்.

அடுத்தாக எமது சபையின் திட்டமிடல் பிரிவை புணரமைப்பதற்கான Estimate தரப்பட்டிருக்கின்றது. ஆனால் அதில் இன்றய நிதி நிலவரத்தை பார்த்து Air Condition தவிர மற்ற வேலைகளை செய்வதற்கான அனுமதியினை வழங்குகின்றேன்.

### தீர்மானம் - 04/42/04

எமது சபையின் திட்டமிடல் பிரிவை புணரமைப்பதற்கான பிரேரணை.

1. Supplying and fixing 3mm clear class pan for existing window louvers as directed.
2. Supplying and fixing Blackout fabric curtains, wooden poles with bracket, tie and tie bracket rate including wall plug, serew, stitching

3. Supplying and fixing sand blast sticker for existing partition as directed
4. Supply and install 13 Amp Plug with switch with wiring
5. Supply and install three unit 13Amp Plug wire cord

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அரசாங்கம் 20 அடி Container இற்குள் Exercise செய்யக்கூடிய உபகரணங்களை தருவதற்கு ஒரு திட்டம் ஒன்று வகுத்திருக்கின்றார்கள். அதில் சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கும் அதை செயற்படுத்துவதற்கான ஒரு முன்மொழிவு செய்யச் சொல்லி ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அது நமது சபைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்த உபகரணங்களை இயங்குவதற்கு 1200 சதுர அடி இடவசதி தேவை. அதே நேரம் ஒரு பயிற்சி பெற்ற Instructor நியமிக்க வேண்டும். Toilets இருக்க வேண்டும். தண்ணீர் வசதி இருக்க வேண்டும் என்று சில நிபந்தனைகளோடு வந்திருக்கின்றது. நான் பிரதேச செயலாளரை சந்தித்து சொன்னேன் நாங்கள் இதை எங்களது ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் செய்யலாம். ஆனால் நாங்கள் அதற்கு ஒரு கட்டணம் அறவிட வேண்டி வரும் Instructor இற்கு சம்பளம் கொடுப்பதற்காக, ஒப்பந்த அடிப்படையில் எடுத்தால் ஆகக்குறைந்தது ரூபா 25,000.00 சம்பளம் கொடுக்க வேண்டி வரும். அதை பாவனையாளர்களிடம் இருந்து அறவீடு செய்தால் மாத்திரம் செயற்படுத்தலாமே தவிர சபையில் இன்றய நிலமைக்கு செய்ய இயலாது. அந்த நிபந்தனையோடு நாம் பாரம் எடுப்பதற்காக Proposal கொடுக்கலாமா என்று நான் சபையின் அனுமதியை கேட்கின்றேன். எமக்கு இருக்கின்ற பாரிய செலவு சம்பளம் கொடுப்பது. அதுவும் ஒப்பந்த அடிப்படையில்தான் செய்யலாம். நிரந்தர தொழிலாக கொடுப்பதற்கு நமக்கு அனுமதி இல்லை. சில நேரம் நிரந்தரமாகலாம்.

### தீர்மானம் - 04/42/05

எமது சபையின் ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதியில் Container Based Cross Fit Gym நிலையத்தினை நிறுவுவதற்கும், பாவனையாளர்களிடம் இருந்து கட்டணம் அறவிடுவதற்கும், பயிற்சி பெற்ற Instructor ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நேற்று உள்ளூராட்சி ஆணையாளர் அவர்கள் நன்றாக இயங்கும் Compost Yard இற்கு 10 இலட்சம் உதவிப் பணம் வழங்குவதற்கு Proposal அனுப்பச் சொல்லி கடிதம் அனுப்பி இருந்தார். நீங்கள் எத்தனை பேர் Compost Yard இனை பார்த்திருக்கின்றீர்கள் என்று தெரியாது. எல்லோரும் கட்டாயமாக சென்று பார்க்க வேண்டும். உங்களது பங்களிப்பு இருக்க வேண்டும். நான் மட்டுமோ அல்லது உப தவிசாளரோ அல்லது 2, 3 பேர் சென்று பார்த்து சொல்வதையும் பார்க்க நீங்கள் சென்று பார்க்க வேண்டும். சம்மாந்துறையை பொருத்தவரையில் 2500 மெட்ரிக் தொன் Compost செப்டம்பர் 20 ஆந் திகதிக்கு முதல் தேவை. ஒக்டோபர் 15 இல் உழவப்பட்டு விதைக்க வேண்டும். பிரதேச சபையின் தொழில் Compost தயாரிப்பது அல்ல. திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் ஒரு அம்சம்தான் Compost தயாரிப்பது. நாங்கள் Compost உற்பத்தியை கூட்ட இயலாது. மக்கள் Compost தயாரிக்க வேண்டும் என்றால் அது ஒரு கிலோ என்ன விலை என்று தெரிய வேண்டும். சபை மானிய அடிப்படையில் ரூபா 10.00 இற்கு கொடுக்கின்றோம். உண்மையாக விற்பது என்றால்

ரூபா 35.00 இற்கு விற்க வேண்டும். தென்னம்பிள்ளை கிராமம் Compost தயாரிப்பதற்கு தகுதியான ஒரு பிரதேசம். அங்கு ஈரலிப்பு இருக்கின்றது, இலை குலை இருக்கின்றது. செய்யக்கூடிய இடம். ஆனால் வறுமையில் வாழ்கின்ற மக்கள் சமுர்த்தியால் ஒரு உதவியை செய்து அந்த மக்களை ஊக்குவிப்பது என்றால் அதற்கு என்ன விலை. விலை தெரியாமல் நீங்கள் செய்யுங்கள் செய்யுங்கள் என்று எத்தனை கூட்டம் நடாத்தினாலும் சரிவாராது. ஒரு மில்லியன் தருகின்றார்கள். எம்மை பொருத்தவரை அரிதட்டு வேண்டும். தயவு செய்து கௌரவ உறுப்பினர்கள் சென்று பார்க்க வேண்டும். இதில் 04 கட்டங்கள் இருக்கின்றது. ஒன்று குப்பைகளை பிரித்து எடுத்து கொட்டுவது. அடுத்தது கொட்டுகின்ற இடத்தில் இருந்து அரைக்கின்ற இடத்திற்கு அதில் இருக்கின்ற Plastic களை கழித்துவிட்டு மீதியை கொண்டு சேர்த்து அதன் பின் அரைப்பது. நாம் அரைப்பதனால் தான் ஒரு மாதத்திற்குள் Compost எடுக்கின்றோம். அரைத்த பின்னர் வருவதனைதான் Pack பண்ணி கொடுக்கின்றோம்.

உண்மையாக தரமான சுத்தமான Compost நமது Yard இல் இருந்து வருகின்றது. அதற்கு அதிக கிராக்கி இருக்கின்றது. இதில் பிரித்து எடுப்பதில்தான் பிரச்சினை இருக்கின்றது. வீடுகளில் இருந்து டொபி தாள், சின்ன Bag, Tooth Paste அதற்குள் வருகின்றது. நாம் நமது கழிவை ஒழுங்காக போடாமல் இன்னொருவருக்கு அந்த அருவருப்பான வேலையை கொடுக்கின்றோம். அதை மக்கள் உணர வேண்டும். அதை நான் மட்டும் கதைத்து பிரயோசனம் இல்லை. ஓரளவுக்கு மாவட்டத்திலையோ வெற்றிகரமாக தெரிப்பை செய்வது சம்மாந்துறை. அதை எல்லோரும் பெருமையாக பேசுகின்றார்கள். வந்து பார்த்தால்தான் தெரியும் அவ்விடத்தில் உள்ள பிரச்சினை. தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள். தற்போது PSDG இல் ஒரு தொகை தொட்டிகள் எடுத்து ஒரு பகுதிக்கு கொடுக்கின்றோம். அதை ஒவ்வொரு வருடமும் தொடருவோம். எந்தப் பகுதி ஒழுங்காக தருகின்றார்கள் என்று வேலை செய்பவர்கள் சொல்கின்றார்களோ அந்தப் பகுதிக்கு இந்த தொட்டிகள் கொடுக்கப்படும். கௌரவ உறுப்பினர்களும் பங்காளிகளாக மாறினால்தான் நாம் நமது காலத்தில் ஒரு விடயத்தை முழுமையாக செய்தோம் என்று இருக்கும். உங்களது ஆதரவை கோருகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இறப்பர் கழிவை மீண்டும் பாத்திரங்களாக மாற்றுவதை நமது சபையால் செய்தோமானால் அதுவும் பூச்சாடி, நிறத்தினாலான வாளிகளை பிரதேச சபையால் உருவாக்கி நமக்கும் இலாபம் கிடைக்கின்ற மாதிரி செய்யலாம். நான் கூட மீன் குப்பைக்குள் ஒன்று விழுந்ததை கையினால் எடுக்கின்ற அளவுக்கு அந்த உணர்வு மாற்றிவிட்டது. அண்மையில் Zoom இல் விவாதப் போட்டி நடந்தது. அதில் எமது கௌரவ உறுப்பினர் நீதிமன்றத்திலும் ஒரு Senior ஆக இருக்கின்ற வழக்கறிஞ்சர் முஸ்தபா அவர்களைதான் தலமை தாங்கி செய்யச் சொன்னது. ஆனால் அவருக்கு முக்கியமான வேலை இருந்ததனால் கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்களை அழைத்தோம். அவருக்கும் வேலை இருந்ததனால் அவரும் வர முடியவில்லை. அதனடிப்படையில் 06 பேரை தயார்படுத்தி வைக்குமாறு சொன்னார்கள். கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் வந்திருந்தார். கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களும் வருவதற்கு இருந்தார் ஏதோ ஒரு காரணத்தினால் வரவில்லை. நாங்கள் பங்குபற்றிய 04 பேரும் சிறப்பாக செய்ோதம். எங்களுக்கு தந்த தொனிப்பொருளும் செய்ய இயலாதது ஒன்று. ஒரு பிரதேச சபையில் ஏனைய கட்சி உறுப்பினர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதுதான் உண்மையாக வாதிடக்கூடியது. ஆனால் எங்களுக்கு தந்தது மதிப்பளிக்கக் கூடாது என்று, ஆனால் நாங்கள் எங்களது வாதத்தை சரியாக முன்வைத்தோம். நாங்கள் ஒரு கருத்தை முன்வைத்தோம் ஏனைய பிரதேச சபைகளை விட கழிவு முகாமைத்துவம் சரியான முறையில் மக்களுக்கு பழக்கியும் இருக்கின்றோம். நடைமுறைப்படுத்தியும் இருக்கின்றோம்.

அடுத்தது நாம் சொல்கின்ற கருத்து சரியாக இருக்கின்றதை நாடித்தான் ஏனையவர்கள் எங்களோடு சேர்ந்து வாக்களித்தார்கள். எங்களது விவாதத்தை முடித்திருக்கின்றோம் அதன் வெற்றி தோல்வி இன்றைக்கு தெரிவிப்பதாக சொன்னார்கள். தெரிவித்திருந்தால் சபையில் அறிவித்திருக்கலாம். இதை ஏன் சொல்கின்றேன் என்றால் மற்ற உறுப்பினர்கள் எங்களுக்கு தெரியவில்லை என்று சொல்லக்கூடாது என்பதற்காக, அவர்கள் சொன்னது 04 உறுப்பினர்கள்தான், 06 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று, அவர்கள் 03 பேர்தான் பங்குபற்றினார்கள்.

ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் இருக்கின்ற காணியை Compost இற்கு இந்த சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தேவையை வைத்துதான் வழங்குகின்றார்கள். அதே நேரம் நெல் காயவைப்பதற்காக ஒரு சங்கம் கேட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். பிரதேச செயலாளர் சொல்கின்றார் உடனடியாக நீங்கள் எடுக்கின்ற ஒவ்வொன்றுக்கும் உங்களது தேவையை முன்னிறுத்தி GA உங்களுடன் இருக்கின்ற ஆதரவை வைத்தும் உடனடியாக உள்வாங்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தற்போது Compost இற்கு இருக்கின்ற முக்கியத்துவத்தை கருதி அதை விருத்தி செய்வதற்கு அந்தக் காணியை சபைக்கு வழங்குவதற்கு தீர்மானமாக எடுத்து DS இற்கு அறிவிப்போம்.

**தீர்மானம் - 04/42/06**

தற்போது அதிமேதகு ஜனாதிபதியின் செயற்திட்டத்தின் கீழ் சேதனப் பயளை தயாரிப்பதற்கான முக்கியத்துவத்தை கருதி அதனை விருத்தி செய்வதற்காக ஆடைத் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள காணியை சபைக்கு வழங்குவதற்கு பிரதேச செயலாளருக்கு அறிவிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

2021.08.13 ஆந் திகதி பிணக்குகள் தீர்ப்பதற்கான Workshop ஒன்று Zoom இல் நடைபெற இருக்கின்றது. அதில் 04 அங்கத்தவர்கள் பங்குபற்ற வேண்டும். இதில் யார் பங்குபற்ற விரும்புகின்றீர்கள்? வீட்டில் இருந்தும் பங்குபற்றலாம். அல்லது அலுவலகத்திற்கு வந்தும் பங்குபற்றலாம். கௌரவ உறுப்பினர் சரீபா, கௌரவ உறுப்பினர் நிலுவ்பா, கௌரவ உறுப்பினர் றியாஸ், கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் பங்குபற்றுவதாக தீர்மானிக்கப்பட்டது.

அடுத்ததாக Computer Maintenance இனை ஒரு Service Agreement இற்கு கீழ் செய்தால்தான் நல்லது. ஒவ்வொரு Computer இற்கும் ஒரு வருடத்தில் 04 தடவை Service செய்வதற்கு ரூபா 1250.00 செலவாகும்.

**தீர்மானம் - 04/42/07**

எமது சபையில் உள்ள கணனிகளை பராமரிப்பதற்கு Computer Maintenance Agreement செய்வதற்கான பிரேரணை.

ஒரு கணனிக்கு வருடத்திற்கு 04 முறை Service பண்ணுவதற்கான செலவு – ரூபா 1250.00

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தயவு செய்து கௌரவ உறுப்பினர்கள் வேறு கருத்துக்கள் இருந்தால் சுருக்கமாக கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இன்றைக்கு முஸ்லிம்களின் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வருடத்தை அல்லாஹ் நல்ல படியாக அமைக்க வேண்டும் என்றும் துஆ

கேட்டவளாக, எங்களது ஊரில் மிகவும் பிரச்சினையான காலமாக இருப்பதனாலும் சம்மாந்துறை வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது பற்றி பலமுறை தவிசாளரிடமும், இந்த ஊரில் உள்ள அதிகாரிகளிடமும் எங்களது வைத்திய அத்தியட்சகர் கூறியுள்ளதாக நேற்று பேசினார். அக்கரைப்பற்றில் - 02, அட்டாளைச்சேனையில் - 02, பாலமுனையில் - 02 என்று இருக்கும் போது எங்களது சம்மாந்துறையிலும் 02 திடீர் மரண விசாரணை அதிகாரி இருக்க வேண்டிய இடத்தில் ஒருவரும் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். ஒரு மரணம் ஏற்பட்ட நேரம் மக்கள் அம்பாரையா? அல்லது அக்கரைப்பற்றா? என்று மிகவும் கஸ்டத்துக்குள்ளான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். முன்னர் இருந்த திடீர் மரண விசாரணை அதிகாரி Dr.அப்துல் மஜீட் அவர்களிடமும் ஒரு வேண்டுகோள் விடுத்த நேரம் அவருக்கும் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என்றும் எங்கள் வைத்திய அத்தியட்சகர் கூறினார். கவலையான விடயம். இதை எல்லோரும் ஒரு தீர்மானமாக கருத்திற் கொண்டு தற்போது நிரந்தரமாக ஒருவரை நியமிக்க முடியாவிட்டாலும், தற்காலிகமாக அல்லது பதில் கடமைக்காக ஒருவரை நியமிக்க வேண்டும் என்று மிகவும் மன வருத்தத்தோடு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, இந்த தீர்மானம் ஏறத்தாள ஒரு வருடத்திற்கு முன் இந்த சபையில் எடுக்கப்பட்டு உடனடியாக கௌரவ நீதி அமைச்சர் அலி சப்ரி அவர்களுக்கு அந்த கடிதம் அனுப்பி கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்களுக்கும் பிரதி இடப்பட்டது. இந்த நியமனம் செய்ய வேண்டியது நீதி அமைச்சு. நாங்கள் அதில் ஓய்வு பெற்ற வைத்தியர் அல்லது ஒரு சட்டத்தரணியாவது இருந்தால்தான் அது ஆக்கபூர்வமாக நடக்கும். நாம் சபையில் தீர்மானம் எடுத்து கடிதம் அனுப்பினோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதில் ஒரு பிரதியை தாங்கள் மீண்டும் உசார்நிலைப்படுத்த வேண்டும். அடுத்தது சம்மாந்துறை வைத்தியசாலையில் அபிவிருத்தி குழுக்களில் எங்களது அங்கத்தவர்களை சேர்ப்பதற்காக வைத்திய அத்தியட்சகர் தவிசாளர் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்புவதற்கு இருக்கின்றார். எங்களது உறுப்பினர்களை கட்டாயம் அதில் சேர்க்க வேண்டும் என்பதில் நான் கவனம் செலுத்துகின்றேன். நேரத்துடன் இருந்ததில் எங்களது உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படாததும் ஒரு காரணம். இன்னும் என்னவென்றால் கொவிட் 19 காரணமாக எங்களது மக்களுக்கு விளங்குதில்லை. அடிக்கடி எல்லா இடத்திலும் அறிவித்தல் கொடுத்தும் மக்கள் கூடுவதனையும், குழந்தைகளை பைசிக்கிள்களில் தெரு ஓரங்களில் கொண்டு செல்வதையும் இன்னும் தடுப்பதாக இல்லை.

எத்தனையோ அறிவித்தல்கள் பள்ளிவாசல்களில் கொடுத்தும் கேட்பதாக இல்லை. தடுமல், இருமல், காய்ச்சல் என்றால் வீட்டில் இருக்க சொல்லியும் வைத்தியசாலைக்கு அடிக்கடி கொண்டு செல்வதையும் நாம் குறைக்க வேண்டும் என்பதனையும் விளிப்புணர்வூட்ட வேண்டும். எங்களது சபை ஊடாக சபை ஊழியர்களை நானும் கன்காணித்து வருகின்றேன். Mask அணியாமல், கையுறை அணியாமல்தான் அவர்களின் தொழிலை செய்கின்றார்கள். இதன் பாதிப்பு, விளைவுகள் என்ன என்று தெரியாமல் இருக்கின்றது. நிந்தவூர், காரைதீவு, அக்கரைப்பற்றில் மரணங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. சம்மாந்துறையில் ஏதோ ஒரு காரணத்தினால் இறைவனின் பக்தி இருக்கின்றதோ தெரியாது. இவ்வாறான மரணம் குறைந்திருக்கின்றது என்றால் பரந்த பிரதேசமாகவும் இருக்கின்றது. அதற்காக எங்களது பாதுகாப்பை குறைத்துக் கொள்வது என்பது மிகவும் கவலைக்கிடமான விடயம். ஒரு திருமண வீட்டில் பார்த்தால் Mask இல்லை. Bank இற்கு செல்வது என்றால் Mask இனை கழற்றிவிட்டு செல்கின்றார்கள். இவ்வாறான விடயங்களுக்கு சபையூடாக ஒரு விளிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கொவிட் 19 இற்குரிய பொதுவான விடயங்கள், எவ்வளவோ அறிவித்தல் கொடுத்தும் எமது மக்கள் இறைவன் மேல் இருக்கின்ற நம்பிக்கையினால் என்ன சொன்னாலும் அல்லாஹ் இருக்கின்றான் என்று கூறுகின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம்.முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வீதி அபிவிருத்தி சம்மந்தமாக பேசி இருந்தீர்கள். ஒப்பந்தகாரர்களுக்கிடையில் இருக்கின்ற பிரச்சினைகளை அறிந்திருக்க வேண்டும். இந்த சபைக்கும் பங்குண்டு. வீதிகள் பல பக்கங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. வீதி அபிவிருத்தி திணைக்களம், RDA, பிரதேச சபைக்குரிய பாதைகள். இதில் சில இடங்கள் இடமாற்றி வேலை செய்வதால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. தற்போது நடைபெறுகின்ற வீதிகள் எல்லாம் RDD இற்கு சொந்தமான வீதிகள். ஆனால் அந்த வேலையை செய்து கொண்டிருப்பவர்கள் RDA. இதை பெரிய Package ஆக மாற்றி கொடுப்பதால் இந்த பிரச்சினை வருகின்றது. இது JAICA திட்டத்தின் கீழ் உள்ளூர் ஒப்பந்தகாரர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்பதனால்தான் அந்த Package சின்ன சின்னதாக பிரிக்கப்பட்டு மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டு அந்த வேலை பூர்த்தி செய்யப்படுகின்றது.

இதே வேலை திருகோணமலையிலும் நடந்து பெரிய Company இற்கு கொடுத்து குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்காததனால் JAICA திட்டம் Failure ஆனது. அவர்களுக்கு வழங்கப்பட்ட காலம் 2, 3 வருடங்கள். இவர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது. காலம் முடிவடைவதற்கிடையில் முடித்து தர வேண்டும் என்று சொல்வார்கள். Sub Contract ஒப்பந்தத்தில் இல்லை. நவலோக்கதான் செய்திருக்க வேண்டும். அவர்கள் உள்ளுக்குள் செய்த ஒப்பந்தத்தினால்தான் Local Contractors இற்கு கொடுத்து செய்கின்றார்கள். உரிய கொடுப்பனவு இல்லாததனால் விட்டுவிட்டு சென்றிருக்கின்றார்கள். இதை நேரடியாக நவலோக்க இற்கும், RDA செயலாளருக்கும் வீதிகளை படம் எடுத்து அனுப்புவதால் அடுத்த Progress Meeting நடக்கும் பொது இதை சுட்டிக் காட்டுவார்கள். இதனால் எமது வேலைகள் நடப்பதற்குரிய சாத்தியம் இருக்கின்றது.

இரண்டாவது விடயம் RDD இன் வீதிகளில் கிட்டத்தட்ட 95 வீதமான வீதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு வருட காலமும் மாகாண சபையினால் ஒதுக்கப்படுகின்ற பணத்திற்கு சம்மாந்துறையில் RDD இற்குரிய வீதிகள் எதுவும் இல்லை. 1ம் குறுக்குத்தெரு, 2ம் குறுக்குத்தெரு, உள் வீதிகள் கிட்டத்தட்ட காபட் அடிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஒதுக்கப்படுகின்ற பணங்கள் வேறு வேறு பிரதேசங்களுக்குதான் செல்கின்றது. அது சம்மாந்துறையில் RDD இற்குரிய வீதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வேலை செய்வதற்கு வீதி இல்லை என்று வருகின்றது. ஆகவே பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் சிலவற்றை RDD இற்கு கொடுத்தோம் என்றால் எதிர்காலத்தில் வருகின்ற அபிவிருத்திகளில் சம்மாந்துறையில் செய்ய முடியாத வீதிகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு பாரப்படுத்தினால் மட்டும்தான் அவ்வீதிகள் RDD இனால் செய்யக்கூடியதாக இருக்கும். ஆகவே இதை எல்லோரும் கருத்திற் கொண்டு எம்மால் செய்ய முடியாத வீதிகள், பராமரிக்க முடியாத வீதிகள் இருந்தால் அவ் வீதிகளை உரிய முறைப்படி மாகாண சபைக்கு கொடுத்தால் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஒதுக்கப்படுகின்ற பணங்கள் எமது சம்மாந்துறைக்கும் பிரயோசனமாக அமையும் என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனக்கு சில விடயங்கள் விளங்காமையினால் எழும்பி இருக்கின்றேன். நாங்கள் உங்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரேரணைகளில் எங்களுக்கு நீங்கள் கட்டளையும் இட்டிருக்கின்றீர்கள் இவைகள் செய்ய வேண்டும், இவைகள் செய்ய முடியாது என்று, அந்த விடயத்தில் சிறுவர்கள், பெண்கள் சம்மந்தமாக ஒரு குழு அமைத்து காழி Court உடன் இணைந்து விவாகரத்து சம்மந்தமான பிரச்சினைகளை தீர்த்து வைக்கலாம் என்ற பிரேரணை கொண்டுவரப்பட்டு அந்தப் பிரேரணைக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அடுத்த விடயம் பொது நூலகம் அதுவும் உங்களது கட்டளைக்கு இணங்க அந்த நூலகத்திற்கு கிறில் அமைப்பது விளக்கமாக, Pot வழங்குவது விடயமாக செய்யப்பட்டது. இன்று வரைக்கும் அது நிறைவேறியதா என்று எனக்கு சந்தேகத்திற்கிடமாகத்தான் இருக்கின்றது. அதுமட்டுமல்ல நான் இங்கு யாரையும் குறைகூற விரும்பவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் எங்களை ஆளுனர் அவர்கள் சந்திப்பதற்கு அம்பாரைக்கு வரச் சொன்ன போது நான் உங்களிடம் அழைப்பு விடுத்து நாங்களும் வர வேண்டுமா என்று கேட்ட

போது என்னிடம் கூறினீர்கள் செயலாளரிடம் Call எடுத்து கேளுங்கள் என்று, செயலாளரிடம் எத்தனையோ தடவை அழைப்பு ஏற்படுத்தியும் அதுவும் காரியாலய நேரத்தில் அழைப்பு விடுத்தும் எனக்கு எந்த Call இற்கும் பதில் அளிக்கவில்லை. காரணம் என்ன என்று எனக்கு விளங்கவில்லை. ஆனால் நாங்கள் கேட்டால் எங்களுக்கு கூறுவார் உங்களுடைய Phone வேலை செய்யவில்லை என்று, தயவு செய்து நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் நாங்கள் இந்த சபைக்கு கொண்டு வருகின்ற பிரேரணைகள் நடைபெறுகின்றதா? இல்லையா என்பதும் விளங்கவில்லை.

நாங்கள் கேட்கின்ற வேலைகள் எங்களுக்கு திருப்திகரமாக செய்யப்படவில்லை என்பதையும் நான் இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அதுமட்டுமில்லை நீங்கள் கட்டளை இட்டீர்கள் சென்ற சபைகளில் தீர்மானங்கள் எடுக்கப்பட்ட வேலைகள் நடைபெற்றதா? இல்லையா? நடைபெறவில்லை என்றால் என்ன காரணம் என்று இந்த சபைக்கு தெரிவிக்க வேண்டும் என்று கேட்ட போது நீங்கள் கட்டளையிட்டீர்கள் அது தெரிவிக்க வேண்டும் என்று, ஆனால் இற்றைவரைக்கும் அது சம்மந்தமாக முன்பு நடந்ததை அடுத்த சபையில் காட்டுகின்றார்கள் ஆனால் நாங்கள் சொன்னது ஆரம்பத்தில் இருந்து அல்லது 02 வருடத்தில் இருந்தாவது நடைபெறவில்லை என்றால் என்ன காரணம் என்று கேட்டும் கூட எங்களுக்கு இந்த சபைக்கு அந்த பதில் அளிக்கப்படவில்லை. இது எங்களுடைய பிரச்சினையா? அல்லது தவிசாளரினுடைய பிரச்சினையா? அல்லது இந்த நிர்வாகத்தினுடைய பிரச்சினையா என்று விளங்கவில்லை. இதற்கு எங்களுக்கு தெளிவான முடிவு ஒன்று கட்டாயமாக கௌரவ தவிசாளர் அவர்கள் பெற்றுத்தர வேண்டும். நான் சொல்கின்றேன் இங்கு எடுக்கின்ற எந்த தீர்மானங்களுக்கும் நான் எதிர்ப்புதான் தெரிவிப்பேன் என்று கூறிக் கொண்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தீர்மானங்கள் நிறைவேற்றுவது, தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துவது நீங்கள் சொன்னமாதிரி நான் கட்டளை இடுகின்றேன். அதை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு செயலாளர். அதில் சில விடயங்கள் நாம் முயற்சி எடுத்தும் செய்ய முடியாமல் போகின்ற போது அதை இந்த அமர்வுக்கும் அடுத்த அமர்வுக்கும் இடையில் கூட தீர்க்கலாம். ஹன்சார்ட் இற்கு பேசிவிட்டு போவதில் பிரயோசனம் இல்லை, குறை கூறுவதில் பிரயோசனம் இல்லை. பெண்கள் விடயம் சம்மந்தமாக நமது Mandate இற்கு வெளியாக இருந்தும் பெண்கள் முதல் ஒருவரும் இருக்கவில்லை தற்போது 25% வந்திருக்கின்றது. அதை செய்வது என்றால் அதை செயற்படுத்தி முடிக்க வேண்டிய பொறுப்பு நிர்வாகிகளிடம் மட்டும் கொடுக்க இயலாது. நாமும் சேர்ந்து செய்ய வேண்டும். குறைகூறுவது இலகு. நானும் யோசிப்பது ஏன் இந்த குறை எல்லாம் கேட்க வேண்டும் என்று, சில விடயங்களில் நடைமுறைச் சிக்கல் இருக்கலாம். அந்த காலகட்டத்திற்குள் பேசி செய்வதுதான் பொருத்தமான விடயம் என்று நான் நினைக்கின்றேன். சிலர் சபை நடவடிக்கைகளைப் பற்றி Social Media இல் எழுதுகின்றீர்கள். நீங்கள் எழுதாவிட்டாலும் உங்கள் மூலமாக எழுதப்படுகின்றது. நான் பார்ப்பதில்லை. சிலர் Forward பண்ணுவார்கள்.

பிரச்சினை ஒன்று இருக்குமானால் நாம் சென்று நாம் நினைக்கின்ற மாதிரி தீரவேண்டும் என்று இல்லை. நாம் விரும்பியதை செய்கின்றோம். ஆனால் நடைமுறையில் சில பிரச்சினைகள் வரலாம். ஆனால் நாம் ஒன்று உணர வேண்டும். நாம் ஒரு காலத்திற்கு சேவை செய்துவிட்டு மக்களுக்கும் பொறுப்பு கூற வேண்டும். நாமும் செல்ல வேண்டும். நிர்வாகம் செய்ய வேண்டியதற்கு வகை கூற வேண்டிய பொறுப்பு ஊழியர்களுக்கு இருக்கின்றது. பொதுவான எண்ணம் தவிசாளர் நினைத்தால் செய்யலாம். ஆனால் செய்வதில்லை. தவிசாளர் நினைக்கலாம் அதை செய்விக்கும் போது ஊழியர்களின் தொழிலுக்கு பாதிப்பு வரும் என்றால் எந்த தவிசாளரும் செய்யமாட்டார். அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. தனிப்பட்ட சில பிரச்சினைகள் தீர்க்க முடியாத நிலையில் நமக்கு விரக்தி ஏற்படக்கூடாது. நானும் எனது தாயை இழந்ததற்கு பின்னர் என்னுடைய மனோ நிலை வேறு. அதை நீங்களோ பார்த்திருப்பீர்கள். ஆனால் மக்கள் நம்மிடம் ஒரு பொறுப்பை தந்துவிட்டார்கள். கௌரவ உறுப்பினர்கள் நமக்குள் என்ன கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் ஒருமித்து பயணிக்க வேண்டும் என்பதில் நாம் செல்கின்றோம். அதற்குள் ஏதாவது செய்து முடிப்போம். முரண்படாமல் இயலுமான அளவு எல்லாம் நாம் நினைக்கின்ற மாதிரி நடக்காது. இவைகளை செய்து முடிப்பதற்கு நமக்கு இருப்பதோ 4,5 மாதம்தான் அதற்குள் என்ன என்ன செய்யலாமோ அதை செய்வதற்கு எனது பூரண ஒத்துழைப்பு இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சபையில் ஏற்கனவே ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது சபையால் கையாள்கின்ற அரச காணிகள் அத்தனையையும் சீர்படுத்தி ஆவணப்படுத்தல் சம்மந்தமாக ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. அதில் நானும் உள்வாங்கப்பட்டிருந்தேன் என்று நினைக்கின்றேன். ஆனால் அது சம்மந்தமாக எந்த முன்னேற்றமும் நடந்ததாக எனக்கு தெரியவில்லை. ஒருவேளை அதில் நான் கவனயீனமாக இருந்துவிட்டேனோ தெரியவில்லை. ஆனால் வருங்காலங்களில் நாங்கள் இவ்வாறான சபை ஒன்று அமைந்து இருந்தும் அந்த சபைக்குரிய சபையால் கையாள்கின்ற காணிகள் அத்தனைக்குமான ஆவணங்கள் சரியான முறையில் கோப்பிடப்படாமல் அல்லது அதில் வலுதல் நடைபெற்று பிரதேச செயலகத்தில் இருந்து உரிய முறையில் காணி ஒப்படைப்பு ஆவணங்கள் பெற்று வைக்காமல் போகும் போது எதிர்காலத்தில் அமைகின்ற சபைகள் பெரும் குற்றச்சாட்டு வைப்பதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றது. எனவே இன்று கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் பிரதேச சபை செயலாளருக்கும் இருக்கின்ற கருத்து ஒருமித்து போகின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அடையாளம் காணப்பட்ட காணிகளுக்கான ஆவணப்படுத்தல் அவசரமாக நடைபெற்றால் சாலப் பொருத்தமாக இருக்கும் என்பது எனது கருத்தாக இருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இதை நாம் எழுத்து மூலமாக RDA இற்கு நெல்லுப்பிடிச் சந்தி, வைத்தியசாலை முன்பாக, பிரதேச செயலகம், பூமரத்து சந்தி வீதிகளில் வேகத்தடைகளை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் உடனடியாக அறிவித்து அது செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கின்றோம் என்று கூறி சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

## தீர்மானம் - 04/42/08

எமது பிரதேசத்தில் பிரதேச செயலகம் / ஆதார வைத்தியசாலை முன்பாக, நெல்லுப்பிடிச் சந்தி, பூமரத்து சந்தி மற்றும் தைக்காப்பள்ளி முன்பாக வேகத்தடைகளை ஏற்படுத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எம்.முஸ்தபா |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை